நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.6, மதுரை.
முன்னிலை : திரு. M. ஆனந்த், B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.6, மதுரை (மு.கூ.பொ.)
2026–ம் ஆண்டு மே மாதம் 14–ம் நாள் வியாழக்கிழமை
குற்றபல்வகை மனு எண். 3098/2026

திினேஷ் (35/2026),
த/பெ. கருப்பையா

...மனுதாரர்/1–ம் எதிரி

/எதிர்/

அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
கோ.புதூர் காவல்நிலையம்,
மதுரை.
குற்ற எண். 128/2026.
u/s. 115(2), 118(1), 296(b), 351(3) BNS

...எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது இன்று என் முன்னிலையில் விசாரணைக்கு வரப் பெற்று, மனுதாரர்/1–ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.V. ஸ்ரீசெந்தில் அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், மனுவையும் மனுவை சார்ந்த சகல ஆவணங்களையும் பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களையும் கேட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

உத்தரவு

1. மனுதாரர்/1–ம் எதிரி கடந்த 29.04.2026–ம் தேதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்றும், மனுதாரர்/1–ம் எதிரி எந்த குற்றமும் செய்யவில்லை என்றும், மனுதாரர்/1–ம் எதிரி சட்டத்தை மதித்து நடக்கும் நபர் என்பதால் தலைமறைவாக மாட்டார் என்றும், மனுதாரர்/1–ம் எதிரியை பிணையில் விடும்பட்சத்தில் தகுந்த ஜாமீன்தாரர்களை முன்நிறுத்த தயாராக உள்ளார் என்றும், எனவே மனுதாரர்/1–ம் எதிரியை பிணையில் விடக்கோரி மனுதாரர்/1–ம் எதிரியின் தரப்பில் பிரிவு 480 ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு வாதம் முன் நிறுத்தப்பட்டது.

ANAND M
Digitally signed by ANAND M
Date: 2026.05.14 17:17:53 +0530

2. அரசுத்தரப்பில், இவ்வழக்கானது புலன் விசாரணையில் உள்ளதாலும், மனுதாரர்/1-ம் எதிரியை பிணையில் விடும் பட்சத்தில் மனுதாரர்/1-ம் எதிரி இதே போன்று குற்றச் செயலில் ஈடுபட வாய்ப்புள்ளதாலும், வழக்கின் விசாரணைக்கு ஒத்துழைக்காமல் தலைமறைவாக வாய்ப்புள்ளது என்பதாலும், சாட்சிகள் மற்றும் சாட்சியங்களை அழிக்க வாய்புள்ளதாலும், மனுதாரர்/1-ம் எதிரியை ஜாமீனில் விட கடுமையாக ஆட்சேபணை தெரிவித்து கொள்ளப்பட்டது.

3. மனுதாரர்/1-ம் எதிரி தரப்பு மற்றும் அரசுத்தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

4. வழக்கின் வாதியும் அவருடன் வேலை பார்ப்பவரும் கடந்த 24.04.2026 அன்று வேலைக்கு சென்றுவிட்டு, மாலை சுமார் 06.00 மணியளவில் ஜவஹர்புரம் ஒயின்சாப்புக்கு சென்று மது அருந்தி கொண்டிருந்தபோது வாதிக்கு பழக்கமான அங்கு வந்த எதிரிகளிடம் வாதி நலம் விசாரித்த போது எதிரி அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கம்பியால் வாதியின் தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவும், மற்றொரு எதிரி கட்டையால் தாக்கியும் கொலைமிரட்டல் விடுத்துச்சென்றதாக எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது வழக்கு ஆவணங்களில் இருந்து அறிய முடிகிறது.

5. மனுதாரர்/எதிரியை பிணையில் விடக் கோரி மனு தாக்கல் செய்துள்ள நிலையில், அரசுத் தரப்பில் கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், மனுதாரர்/எதிரி கடந்த 29.04.2026-ம் தேதியன்று கைது செய்யப்பட்டு 16 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், வழக்கில் காயம்பட்ட நபர் மருத்துவ சிகிச்சையில் இருந்து விடுவிக்கப்பட்டதை கருத்தில் கொண்டும், வழக்கின் மற்றொரு எதிரி கடந்த 08/05/2026 அன்று இந்நீதிமன்ற Crl.M.P.No.2957/2026 உத்தரவு பிரகாரம் நிபந்தனையுடன் பிணை பெற்றுச்சென்றுள்ளதை கருத்தில் கொண்டும், எதிரிக்கு முன்வழக்கு எதுமில்லை என்பதை கருத்தில் கொண்டும், மனுதாரர்/எதிரி தகுந்த பிணையதாரர்களை முன்நிறுத்த தயாராக உள்ளதை கருத்தில் கொண்டும், மனுதாரர்/எதிரிக்கு நிபந்தனையுடன் கூடிய ஜாமீன்

ANAND M
Digitally signed by ANAND M
Date: 2026.05.14 17:18:00 +0530

வழங்குவது  நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனுவானது பின்வரும் நிபந்தனைகளின் கீழ் அனுமதிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள் :–</u>

1. மனுதாரர்/1–ம் எதிரி தனக்காக தலா இரு பிணையதாரர்களை முன்னிறுத்தி தலா ரூபாய் பத்தாயிரத்திற்கான பிணையப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

2. மனுதாரர்/1–ம் எதிரி எதிர்மனுதாரர் காவல்நிலையத்தில் தினமும் காலை 10.00 மணிக்கு தொடர்ந்து 30 நாட்களுக்கு  கையொப்பமிட்டு வரவேண்டும்.

3. மனுதாரர்/1–ம் எதிரி இவ்வழக்கின் விசாரணைக்கும், விசாரணை அதிகாரிக்கும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்றும், சாட்சிகளை கலைக்க முற்படக்கூடாது என்றும் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 14.05.2026–ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

ANAND M
Digitally signed by ANAND M
Date: 2026.05.14 17:18:05 +0530

நீதித்துறை நடுவர் எண்.6,
மதுரை (மு.கூ.பொ.)